உடன்குடி வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)/பரமன்குறிச்சி தனி அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை : திருபதி.ஆ.சுப்புலெட்சுமி.,

தி5/501/2025 நாள் : 07.05.2025

பொருள் : மனை வரன்முறை - அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகள் - உடன்குடி ஊராட்சி ஒன்றியம் பரமன்குறிச்சி ஊராட்சி கிராம சர்வே எண் 308/1-ல் அடங்கியுள்ள விற்கப்படாமல் உள்ள 30 மனைகள் வரன்முறைபடுத்திட தூத்துக்குடி நகர் ஊரமைப்பு துணை இயக்குநரால் வழங்கப்பட்டது - 30 மனைகளை வரன்முறை செய்து உத்தரவிடல் - தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை எண் 16 (ம) 18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 04.02.2019 (ம) 30.01.2020
2. அரசாணை எண் 181, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்:09.12.2020
3. தூத்துக்குடி மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண் ROC No.66UDQ07/ THOOTHUKUDI/2025/TCP நாள்: 06.01.2025.
4. திரு.ரமேஷ் புஷ்ணம், பரமன்குறிச்சி ஊராட்சி என்பவரின் மனு நாள்:இல்லை
5. மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மண்டலம்-I அவர்களின் அறிக்கை நாள்: 30.04.2025.

உத்தரவு :

தூத்துக்குடி மாவட்டம் உடன்குடி ஊராட்சி ஒன்றியம், பரமன்குறிச்சி ஊராட்சி கிராம சர்வே எண் 308/1-ல் அடங்கியுள்ள விற்கப்படாமல் உள்ள 30 மனைகளை பார்வை 3-ல் காணும் கடிதத்தின்படி வரன்முறை செய்ய தூத்துக்குடி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களால் அனுமதிக்கப்பட்டு கீழ்கண்டவறு மனைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

வ. எண்	மனுதாரர் விபரம்	ஊராட்சி சர்வே எண்	ஒதுக்கிய மனைகள் எண்ணிக்கை	மனைப் பிரிவின் மொத்த பரப்பு	உத்தேச மனைப்பிரிவு சாலைகள் மற்றும் மூலை முடக்குகளின் பரப்பு	சாலை நீங்கலாக மனைகளின் பரப்பு	கட்டணம் விபரம்
1.	திரு.ரமேஷ் புஷ்ணம், பரமன்குறிச்சி	308/1	30	4750 ச.மீ	1593.31 ச.மீ	3156.69 ச.மீ	Layout Approval Fees - ரூ.30000 (Application No-66UWDQO7, Date-07.05.2025) Layout Inspection Fess ரூ81644 (Application No-66UWDQO7, Date-07.05.2025)

பார்வை 4-ல் காணும் கடித்தின்படி, பரமன்குறிச்சி ஊராட்சி கிராம சர்வே எண் 308/1-ல் அமைந்துள்ள மனை எண் 1 முதல் 30 (30 மனைகள்) வரையிலான மனைகள் மட்டும் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு வரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்:-
1. மனுதாரரால் அளிக்கப்பட்டுள்ள விபரங்களில் ஏதேனும் சரியானவை அல்ல என்று பின்வரும் காலங்களில் அறியப்பட்டாலோ அல்லது அரசு விதிமுறைகள் மீறப்பட்டாலோ இவ்வாணை உடனடியாக எவ்வித முன்னறிவிப்புமின்றி இரத்து செய்யப்படும்.
2. அரசுக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட சாலை மற்றும் பூங்காக்கள் இடத்தின் மீது பின்னாளில் எவ்வித உரிமையும் கோரக் கூடாது.
3. வரன்முறை செய்யப்படும் மனைகள் குறித்து நீதிமன்றத்தில் வழக்குகள் ஏதும் நிலுவையில் இருப்பின், நீதிமன்ற தீர்ப்பினை பொறுத்து இவ்வாணையினை இரத்து செய்திட உடன்குடி வட்டார வளர்ச்சி அலுவலர்(கிராம ஊராட்சிகள்)/பரமன்குறிச்சி தனிஅலுவலர்-க்கு முழு அதிகாரம் உண்டு.

வட்டார வளர்ச்சி அலுவலர்,
(கிராம ஊராட்சிகள்)
உடன்குடி.

பெறுநர்

திரு.ரமேஷ் புஷ்ணம்,
பரமன்குறிச்சி ஊராட்சி